விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று)
VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆவணி - 7 திங்கள் 23.08.2021 மலர் - 2, இதழ் - 139

# மணிப்பூர் கவர்னர் ஆகிறார் இல.கணேசன்


விஜயபாரதம்

ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் இணைந்து, பின்னர் அந்த அமைப்பிலேயே முழுநேர ஊழியராக வந்தவர் இல. கணேசன். ஆர்.எஸ்.எஸ்சில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர். பா.ஜ.கவில் மாநில அமைப்புச் செயலாளர், தேசிய செயலாளர், துணைத்தலைவர், தமிழக பா.ஜ.க தலைவர், மாநிலங்களவை உறுப்பினர் என, பொதுவாழ்வில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு பல ஆண்டுகள் தேசப்பணியாற்றிய மூத்தத் தலைவர் இல. கணேசன். அவரை தற்போது மணிப்பூர் கவர்னராக நியமித்து குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் உத்தரவு பிறப்பித்து உள்ளார். அவருக்கு விஜயபாரதம் சார்பாக வாழ்த்துகள்.

# கேளிக்கைக்கு அனுமதி பக்திக்குத் தடை

கொரோனோவை காரணம் காட்டி ஒவ்வொரு மாதமும் திருவண்ணாமலையில் நடைபெறும் பவுர்ணமி கிரிவலத்தை ரத்து செய்து வருகிறது தமிழக அரசு. இதனால், மாதக்கணக்கில் பக்தர்கள் கிரிவலம் செல்ல முடியாத சூழல் நிலவுகிறது. அந்த வரிசையில், இந்த மாதமும் திருவண்ணாமலை பௌர்ணமி கிரிவலம் செல்ல தடை விதித்துள்ளது தி.மு.க தலைமையிலான தமிழக அரசு. கொரோனா வெகுவாக குறைந்துள்ள சூழலில், அரசுப் பேருந்துகளில் சமூக இடைவெளி இன்றி மக்கள் பயணம் செய்கின்றனர். அரசியல்வாதிகள் நடத்தும் விழாக்களிலும் சமூக இடைவெளி கடைபிடிக்கப்படுவது இல்லை, டாஸ்மாக் கூட்டம் குறித்துக் கேட்கவேத் தேவையில்லை. இதையெல்லாம் கண்டுகொள்ளாத தி.மு.க அரசு, கிரிவலத்தை மட்டும் திட்டமிட்டே தடுக்கிறது. இன்று முதல் தமிழகத்தில் திரையரங்குகள் திறக்கவும் அனுமதி வழங்கியுள்ளது. கேளிக்கைக்கும் குடிக்கும் தாராளமாக அனுமதி அளிக்கும் தமிழக அரசு, கட்டுப்பாடுகளுடன் கிரிவலத்தை அனுமதிக்காதது ஏன் என பக்தர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

விஜயபாரதம்



# இந்து முன்னணி போராட்டம்

விழுப்புரம் தொடர்ந்தனூர் கிராமத்தில் சட்டவிரோதமாக நடைபெற்று வரும் கிறிஸ்தவ தேவாலயத்தை அகற்றக்கோரி இந்து முன்னணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

விஜயபாரதம்



# ஆப்கன் எம்.பி. நரேந்தர் சிங் கல்சா



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தான் நாடாளுமன்ற உறுப்பினர் நரேந்தர் சிங் கல்சா, காபூலில் இருந்து பாரதம் வந்தடைந்தார். அப்பொழுது பத்திரிக்கையாளர்களிடம் பேசிய அவர், 'எனக்கு அழுகை வருகிறது. கடந்த 20 ஆண்டுகளில் கட்டமைக்கப்பட்ட அனைத்தும் இப்போது முடிந்துவிட்டது. தற்பொழுது பூஜ்ஜியமாக உணர்கிறேன்' என கூறியுள்ளார்.

# அரசு நிலத்தில் சர்ச் கட்டுமானம்



விஜயபாரதம்

திருப்பூர் மாவட்டம் வெள்ளகோவில் வேலப்பநாயக்கன் வலசு ஊராட்சி சேனாபதிபாளையத்தில் கொங்கலம்மன் கோவில் உள்ளது. இக்கோவிலின் அருகே உள்ள அரசு புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்து எவ்வித அனுமதியும் இன்றி சிலர் சர்ச் கட்டி வருகின்றனர். ஏற்கனவே, அரசு நில ஆக்கிரமிப்பு, திட்டமிட்டே ஹிந்து கோவில் அருகே சர்ச் கட்டி சமூக பதற்றத்தை உருவாக்குதல், போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தும் சர்ச் நிர்வாகத்தின் செயல்பாடுகளை சுட்டிக்காட்டி, சர்ச் கட்டும் பணிகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்று கடந்த 2020 மார்ச் 10ம் தேதி புகார் அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சர்ச் கட்டுமான பணியை அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர். தற்போது அவர்கள் மீண்டும் கட்டுமான பணிகளை தொடங்கியுள்ளனர். எனவே இந்த பணிகளை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்று விஷ்வ ஹிந்து பரிஷத் மாவட்டத் தலைவர் ராஜகோபாலன், வருவாய்த்துறை அதிகாரிகளிடம் புகார் மனு அளித்துள்ளார்.

# உத்தராகண்ட் கர்டாங் காளி



விஜயபாரதம்

உத்தரகாண்ட் அரசு உத்தரகாசி மாவட்டம் நெலோங் பள்ளத்தாக்கில் 11,000 அடி உயரத்தில் அமைந்துள்ள 150 ஆண்டுகள் பழமையான மரப்பாலமான கர்டாங் காளியை சமீபத்தில் புதுப்பித்து சுற்றுலாப் பயணிகளுக்காக திறந்துவிட்டுள்ளது. 136 மீ நீளம் மற்றும் 1.8 மீ அகலம் கொண்ட பாலம் கங்கோத்ரி தேசிய பூங்காவிற்குள், உத்தரகாசி மாவட்ட தலைமையகத்தில் இருந்து 90 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. திபெத்துக்கான பழங்கால வர்த்தகப் பாதையின் ஒருபகுதியாக இருந்த கார்டாங் காளி பாலம், பெஷாவர் பதான்களால் கட்டப்பட்டதாக நம்பப்படுகிறது. 1962ல் பாரத சீனப் போரைத் தொடர்ந்து மூடப்பட்டது. பல வருடங்களாக பயன்பாட்டில் இல்லாத நிலையில் சேதமடைந்தது. தடைசெய்யப்பட்ட பகுதியாக அரசால் அறிவிக்கப்பட்டது. புதுப்பிக்கப்பட்ட இந்த பாலம் சுற்றுலாப் பயணிகளை வெகுவாக ஈர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# முருகன் சிலை உடைப்பு



விஜயபாரதம்

தென்காசி மாவட்டம் கடையம் அருகே பிரசித்தி பெற்ற தோரணமலை முருகன் கோவில் உள்ளது. இக்கோவிலுக்கான நுழைவு வாயில் மாதாபுரம் எனும் இடத்தில் அமைந்துள்ளது. இந்த நுழைவு வாயிலில் ஒரு முருகன் சிலையும் கோவில் உண்டியலும் நிறுவப்பட்டுள்ளது. அந்த முருகன் சிலை, சில மர்ம நபர்களால் உடைக்கப்பட்டுள்ளது. இது அப்பகுதி மக்களிடம் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக விசாரித்த காவல்துறையினர் அதே பகுதியை சேர்ந்த சிவக்குமார் என்பவர் இரவு மதுபோதையில் முருகன் சிலையை உடைத்ததாக தெரிவித்துள்ளனர். அவரை கைது செய்துள்ளனர். ஆனால் அவர், இச்செயலை மது போதையில்தான் செய்தாரா அல்லது கிறிஸ்தவ மிஷனரிகளின் தூண்டுதலால் செய்தாரா என விசாரிக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஏனெனில், கிறிஸ்தவ மதபோதகர் மோகன் சி லாசரஸின் 'இயேசு விடுவிக்கிறார்' சர்ச் அங்கு இருப்பதால் தோரணமலை என்னும் பெயர் பலகையில் மாதாபுரம் என்று குறிப்பிட்டு அந்த ஊரையே மாதாபுரம் என்று மாற்றிவிட்ட சர்ச்சை ஏற்கனவே அங்குள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹெட்கேவாருக்கு ஆம்புலன்ஸ் சர்வீஸ்



விஜயபாரதம்

மண்டைக்காடு பகவதி அம்மன் சேவா டிரஸ்ட் சார்பாக, டாக்டர் ஹெட்கேவர் இலவச மருத்துவ அவசர ஊர்தி சேவை துவக்க நிகழ்ச்சி மண்டைக்காடு பகவதி அம்மன் திருக்கோவில் முன்பு நடைபெற்றது. இதில் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# ஆபரேஷன் சத்பாவனா




விஜயபாரதம்

ஜம்மு காஷ்மீர், லடாக் யூனியன் பிரதேசங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதியான குழந்தைகள், இளைஞர்களுக்கு நாடு முழுவதும் ராணுவ நலக் கல்வி சங்கத்தின் (AWES) கீழ் செயல்படும் உண்டு ராணுவ உறைவிடப் பள்ளிகள், கல்லூரிகளில் பள்ளி கல்வி, கல்லூரிப் படிப்புகளுக்கு நமது பாரத ராணுவம் 'ஆபரேஷன் சத்பவனா' என்ற பெயரில் நிதியுதவி அளிக்க உள்ளது. அடுத்த கல்வியாண்டில், பஞ்சாப், உத்தராகண்ட்டில் உள்ள ராணுவப் பொதுப் பள்ளிகளில் தலா 50 இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. 2022 23 கல்வியாண்டில் டெல்லி, உ.பியில் உள்ள ராணுவ பள்ளிகளில் 100 இடங்கள் மேலும் சேர்க்கப்படும். இதைத்தவிர பெங்களூரு, கவுஹாத்தியில் உள்ள கல்லூரிகளில் தலா ஆறு இடங்கள் ஒதுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாணவர்களுக்கு நட்சத்திர ஆசிரியர்களிடம் கல்வி பயிலும் வாய்ப்பு, புதுமை கற்றல் போன்ற சிறந்த பயிற்சிகளும் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

# அயோத்தியை இணைக்கும் புல்லட் ரயில்



விஜயபாரதம்

அயோத்தியை சர்வதேச சுற்றுலா வரைபடத்தில் சேர்க்க பல திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. அதில் ஒன்றாக தேசிய அதிவேக ரயில் கழகம் (NHSRC) அயோத்தியை புதுடெல்லியை இணைக்கும் புல்லட் ரயில் திட்டத்தை தொடங்க, தடையில்லா சான்றிதழுக்கு விண்ணப்பித்துள்ளது. இத்திட்டத்தின்படி, அதிவேக புல்லட் ரயில் புதுடெல்லியை அயோத்தியுடன் இணைக்கும். முன்னதாக, டெல்லியையும் வாரணாசியையும் ஆக்ரா, லக்னோ, பிரயாக்ராஜ் வழியாக இணைக்க 941.5 கி.மீ பாதையின் விரிவான திட்டம் தாக்கல் செய்யப்பட்டது. இப்போது அதில் அயோத்தியும் இணைக்கப்பட்டுள்ளது. லக்னோவிற்கும் அயோத்தியாவுக்கும் இடையேயான 130 கி.மீ தனி இணைப்பு பாதை இத்திட்டத்தில் சேர்க்கப்படும். இந்தத் தடத்தில் ரயில்கள் 320 கி.மீ வேகத்தில் பயணிக்கும். இது டெல்லி அயோத்தி இடையே பயண நேரத்தை மூன்று மணி நேரமாக குறைக்கும். 7 ஆண்டுகளில் இது செயல்பாட்டிற்க்கு வரும். இரண்டு புல்லட் ரயில்கள் இயக்கப்படும். இதற்காக தற்போது எட்டு கிராமங்களில் 75 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த விவசாயிகளுக்கு, பிரதம மந்திரி வீட்டு வசதித்திட்டத்தின் கீழ் ஒரு வீடு, அரசுக்கு விற்ற நிலத்திற்கான பண இழப்பீடு உள்ளிட்டவை தரப்பட்டுள்ளன.

# முன்னாள் எம்.எல்.ஏ. கைது



விஜயபாரதம்

இந்திய விவசாயிகள் மற்றும் தொழிலாளர் கட்சியை சேர்ந்த முன்னாள் டெல்லி சட்டமன்ற உறுப்பினர் விவேகானந்த் சங்கர் பாட்டீல் என்பவர் கர்னாலா நகரி சகரி வங்கியின் முன்னாள் தலைவர், இன்டர்அலியா, கர்னாலா ஸ்போர்ட்ஸ் அகாடமி தலைவர் உள்ளிட்ட பொறுப்புகள் வகித்தவர். இவர், இதனைப் பயன்படுத்தி கடந்த 2008 முதல் போலி கணக்குகள், செலவினங்கள், கடன்கள் என சுமார் 234 கோடி ரூபாய்க்கும் அதிகமாக முறைகேடு செய்துள்ளார். இது குறித்த விசாரணையில், இரண்டு மாதங்களுக்கு முன் அவரை கைது செய்த அமலாக்கத்துறை, அவரது சொத்துகளை தற்போது முடக்கியுள்ளது.

# குஜராத்தில் ஒருலட்சம் கோடி முதலீடு



விஜயபாரதம்

உலகின் முன்னணி எஃகு உற்பத்தி நிறுவனமான ஆர்செலார் மிட்டல் நிறுவனத்தின் தலைவர் லக்ஷ்மி மிட்டல், கடந்த வெள்ளிக்கிழமை குஜராத்தின் காந்திநகரில் அம்மாநில முதல்வர் விஜய் ரூபானியை சந்தித்து பேசினார். அதன் பிறகு குஜராத் அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில், கடந்த 2019ல் எஸ்ஸார் நிறுவனத்திடம் இருந்து ஆர்செலார் மிட்டல் கையகப்படுத்திய இரும்பு உருக்காலை நிறுவனமான ஆர்செலார் மிட்டல் நிப்பான் ஸ்டீல் இந்தியா (AM/NS India) ஆலையை விரிவுபடுத்த ரூ. 50,000 கோடியை லக்ஷ்மி மிட்டல் முதலீடு செய்ய உள்ளார். மேலும், குஜராத்தில் சூரிய, காற்றாலை ஆற்றல் மற்றும் ஹைட்ரஜன் வாயு உற்பத்திக்கு ரூ. 50,000 கோடியை முதலீடு செய்ய அவர் விருப்பம் தெரிவித்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை வரவேற்ற முதல்வர் ரூபானி தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதாக உறுதியளித்தார்.

# உஜ்ஜயினியில் பாகிஸ்தான் கோஷம்

கொரோனாவை முன்னிட்டு அனைத்து மத ஊர்வலங்களுக்கும் மத்திய பிரதேசத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த சூழலில், உஜ்ஜையினி மாவட்டத்தில் உள்ள கீதா காலனிப் பகுதியில் தடையை மீறி முகரம் ஊர்வலம் நடத்த முஸ்லிம்களின் கூட்டம் ஒன்று கூடியது. ஊர்வலத்திற்கு காவல்துறை அனுமதி மறுத்தது. உடனேயே அக்கூட்டத்தில் இருந்தச் சில முஸ்லிம் இளைஞர்கள் நமது நாட்டிற்கு எதிராகவும் பாகிஸ்தானுக்கு ஆதரவாகவும் கோஷங்களை எழுப்பினர். இதனால் தற்போது கோஷங்கள் எழுப்பிய 10 பேர் மீது தேசத்துரோகக் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. வீடியோக்கள் மூலம் பாகிஸ்தானுக்கு ஆதரவான கோஷங்களை எழுப்பிய நபர்களை அடையாளம் காணும் பணி நடைபெற்று வருவதாக உஜ்ஜையினி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சத்யேந்திர கௌஷல் தெரிவித்துள்ளார். நமது தேசத்திற்கெதிரான தலிபான் மனப்பான்மை சகித்துக்கொள்ளப்படாது என அம்மாநில முதல்வர் தெரிவித்துள்ளார்.



விஜயபாரதம்

# பழங்குடியை கொடுமைப்படுத்திய காங்கிரஸார்



விஜயபாரதம்

மகாராஷ்டிரா, பால்கரை சேர்ந்த காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் சுனில் புஜாராவின் நெருங்கிய உதவியாளர் ராமதாஸ் அம்பு கோர்டே. இவர், பழங்குடியினத்தை சேர்ந்த கலு பவார் என்பவருக்கு அவரது மகனின் இறுதிச் சடங்கிற்காக ஐநூறு ரூபாய் கடன் கொடுத்துள்ளார். அதற்காக கலு பவாரை தனது விவசாய நிலத்தில் வேலை, கால்நடை மேய்ச்சல் என பல மாதங்களாக கொத்தடிமையாக வைத்துள்ளார். இரண்டு வேளை உணவு, அடித்தல், சம்பளம் மறுப்பு என பல கொடுமைகளை செய்துள்ளார். இதனால் மனமுடைந்த கலு பவார், தூக்கிட்டு தற்கொலை செய்துக்கொண்டார். அவரது தற்கொலையை மறைக்க முயன்றுள்ளார் கோர்டே. சமூக ஆர்வலரான விவேக் பண்டிட்டின் முயற்சியால் இந்த விஷயம் வெளியானது. இதனையடுத்து, கோர்டே மீது கட்டாய தொழிலாளர் முறை, கொத்தடிமை தொழிலாளர் ஒழிப்பு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அவர் கைது செய்யப்படவில்லை. தனது உதவியாளருக்கு ஆதரவாக எம்.எல்.ஏ புஜாரா இந்த குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார்.



விஜயபாரதம்

# நக்ஸல் வாழ்க்கை ஒரு நரகம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (மாவோயிஸ்ட்) பயங்கரவாதப் பிரிவான பி.எல்.ஜி.ஏ (மக்கள் விடுதலை கெரில்லா இராணுவம்), சுமார் 60 சதவீதப் பெண்களை உள்ளடக்கியது. இதில் அதிகமான பெண்கள் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டு, மிரட்டப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த பெண்களின் நிலை பரிதாபமானது. அவர்களுக்கு அங்கு உரிய சமத்துவம் கிடைப்பதில்லை. பெண்களை சண்டைக்கு மட்டும் இல்லாம, ஆண்களின் உடல் தேவைகள், உணவு சேகரிப்பு, கற்பழிப்பு என மனதளவிலும் உடல் அளவிலும் கடும் சித்ரவதைகளை அன்றாடம் சந்திக்கின்றனர். அது ஒருவகையில் கொத்தடிமை வாழ்க்கை. அவர்களுக்கு திருமணம், குழந்தைபேறு உள்ளிட்டவை மறுக்கப்படும். தப்பிச் சென்றவர்கள் மீண்டும் சிக்கினால் அதைவிட வேறு நரகம் இல்லை. அதில் உள்ள எங்களை போன்ற ஆயிரக்கணக்கான பெண்கள் இயல்பான வாழ்க்கையையே விரும்புகிறார்கள்.’ என சரணடைந்த ராஷ்மி, தேவி நேத்தம் (பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன) என்ற முன்னாள் நக்சலைட்டுகள் தெரிவித்துள்ளனர். ராஷ்மி தற்போது தண்டேவாடாவில் உள்ள சுகாதாரத் துறையிலும், தேவி நேத்தம் காவல்துறையிலும் தற்போது பணியாற்றி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


# துபாயில் சீன சிறைச்சாலைகள்



விஜயபாரதம்

சீனாவில் உள்ள சின்ஜியாங் மாகாணத்தில் உய்குர் முஸ்லிம்களை சீன அரசு கொடுமைப் படுத்துவது உலகறிந்த ரகசியம். இந்நிலையில், சீனாவை சேர்ந்த ஹான் இனத்தை சேர்ந்த வாங் ஜிங்யு என்ற பெண், அசோசியேட்டட் பிரஸ்ஸுக்கு அளித்த ஒரு பேட்டியில், 'எனது வருங்கால கணவர் வு ஹுவான் சீனாவை சேர்ந்த உய்குர் முஸ்லிம். அவரை கைது செய்வதற்காக, சீன காவல்துறையினர், என்னை துபாயில் கைது செய்து ஒரு ரகசிய இடத்தில் 8 நாட்கள்வரை சிறை வைத்தனர். என்னிடம் என் வருங்கால கணவர் கொடுமை செய்வதாக எழுதி வாங்கிக்கொண்டு அனுப்பிவிட்டனர். அவர்கள் துபாய் உட்பட பல்வேறு நாடுகளில் உய்குர் முஸ்லிம்களை வேட்டையாட, விசாரிக்க ஏதுவாக, ரிசார்ட், தங்கும் விடுதிகளை வாடகைக்கு எடுத்து அதனை ரகசிய சிறைச்சாலைகளாக மாற்றியுள்ளனர். என்னை சிறைவைத்த இடத்தில் 2 உய்குர் முஸ்லிம்களை சந்தித்தேன் என கூறியுள்ளார். இந்த குற்றச்சாட்டு குறித்து கருத்தை அறிய சீன வெளியுறவு அமைச்சகம், துபாயில் உள்ள அதன் துணை தூதரகத்தை பலமுறை அசோசியேட்டட் பிரஸ் தொடர்பு கொண்டது. ஆனால், சீனா அதற்கு பதில் அளிக்கவில்லை.

# நெருக்கடியில் பாகிஸ்தான் கிறிஸ்தவர்கள்



விஜயபாரதம்

அரசியல் மற்றும் வெளியுறவு மையம் (CPFA) என்ற அமைப்பின் சார்பில் வெளியான ஒரு கட்டுரையில், அதனை எழுதிய மரியோ டி காஸ்பெரி, 'கிறிஸ்தவ சமூகத்திற்கு எதிரான பாகுபாடு பாகிஸ்தானில் ஆழமாக வேரூன்றியுள்ளது. முஸ்லீம்கள் அவர்களை 'சூர்ஹா' அல்லது 'காஃபிர்' போன்ற அவதூறான சொற்களைப் பயன்படுத்தி அழைக்கின்றனர். கிறிஸ்துவர்கள் அங்கு ஏழைகளாக, உடல் உழைப்பை மட்டுமே நம்பி உள்ளவர்களாக, படிப்பறிவு குறைந்தவர்களாக இருக்க நிர்பந்தம் ஏற்படுகிறது. நில அபகரிப்பு, கடத்தல், கட்டாய மதமாற்றம், பொய் வழக்குகள், வீடுகள், தேவாலயங்கள் நாசப்படுத்தப்படுவது என கொடுமைகள் நடக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் 1,000 கிறிஸ்தவ பெண் குழந்தைகள் கடத்தப்படுகிறார்கள். கடத்தப்பட்டவர்கள் மீட்கப்பட்டாலும் அவர்களை மீண்டும் கடத்திச் செல்வது, குடும்பத்தினரைக் கொன்றுவிடுவதாகவோ மிரட்டுவது நடக்கிறது. சில மோசமான வேலைகளுக்கான விளம்பரங்களில் கிறிஸ்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம் என குறிப்பிடப்படுகிறது' என்று தெரிவித்துள்ளார்.

# பாரதத்திற்கு தலிபான் வேண்டுகோள்



விஜயபாரதம்

பாரதம் அதன் தூதரக உறவுகளை முன்போலவே தொடர வேண்டும் என ஆப்கனை துப்பாக்கி முனையில் கைப்பற்றிய தலிபான்கள் தற்போது வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதனை விடுத்தவர் நமது இந்திய ராணுவ அகாடமியில் பயிற்சி பெற்று ஆபகான் ராணுவத்தில் பணியாற்றி பிறகு தலிபான் அமைப்பில் இணைந்து 19962001களில் தலிபான் ஆட்சியில் ஆப்கானிஸ்தானின் வெளியுறவு அமைச்சராக இருந்த ஷேர் முகம்மது அப்பாஸ் ஸ்டனிக்சை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆதார் கார்டு போட்டோ



விஜயபாரதம்

அனைத்திற்கும் ஆதார் அட்டை அவசியமான ஒன்றாக மாறிப் போன இன்றைய சூழலில், பெரும்பாலானோர் அதில் வருந்தும் ஒரு முக்கிய விஷயம் அதில் உள்ள தங்களது புகைப்படமாகத்தான் இருக்கும். எப்போதோ எடுத்தது, அரைகுறை வெளிச்சத்தில் தெளிவில்லாமல் எடுத்தது என்ற வருத்தம் இருக்கத்தான் செய்கிறது. சமயத்தில், அதில் இருப்பது நாம்தானா என்ற சந்தேகம் நமக்கே வருவதும் உண்டு. குழந்தைகளும் இதில் ஒரு சிக்கல். வேகமான அவர்களின் வளர்ச்சி காரணமாக, பள்ளியில் சேர்க்கும் போது பல நேரங்களில் அவர்களின் புகைப்படம் பொருந்தாமல் போகிறது. இனி இதுப்போன்ற கவலை தேவை இல்லை. இந்த பிரச்சனைக்கு ஒரு எளிய வழி உள்ளது. ஆதார் சேர்க்கை மையம் செல்வதன் மூலம் உங்கள் பழைய ஆதார் புகைப்படத்தை நீங்கள் மாற்ற முடியும். ஆதார் கார்டை டவுன்லோட் செய்து எடுத்துக் கொண்டு ஆதார் சேர்க்கை மையத்திற்குச் செல்லவும். புகைப்படம் மாற்றப் படிவத்தை பெற்று பூர்த்தி செய்து அதற்கான கட்டணத்துடன் அளிக்கவும். அம்மையத்தின் அலுவலர்கள், தங்களை அப்போது புதிதாக புகைப்படம் எடுத்து ஆதாரில் இணைத்துவிடுவார்கள். அங்கு செல்லும் முன், சற்று மேக்கப் செய்துக்கொண்டு செல்வதையும் சிந்திக்கலாம் !!!



# மத்திய அமைச்சருக்கு ராக்கி

ரக்ஷாபந்தன் தினத்தை முன்னிட்டு மத்திய இணை அமைச்சர் முருகன் இல்லத்தில், ஏ.பி.ஜி.பி நுகர்வோர் இயக்கம் சார்பில் அவருக்கு ராக்கி அணிவித்து வேல் படம் தந்து கௌரவிக்கப்பட்டது. இதில் அந்த அமைப்பை சேர்ந்த எம். என் சுந்தர், கே. வெங்கட்ராமன், ஷர்மிளா, பசுபதி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# வலையில் சிக்கிய மீம்கள்








# குருவும் கஞ்சனும்

விஜயபாரதம்

ஒரு ஊரில் ஒரு பரம கஞ்சன் இருந்தான். எச்சில் கையால் காகத்தை விரட்ட மாட்டான். ஆனால் நல்ல பணக்காரன். அப்பேற்பட்ட கஞ்சன் குருவிடம் வந்தான். இவனுக்கு 'பசுமரத்தில் ஆணி பதிவது போல' புத்தி புகட்ட வேண்டும் என்று அவர் நினைத்தார். இருந்த போதிலும் நேரடியாகச் சொல்லாமல் 'வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல' கற்பிக்க எண்ணினார்.

அன்பரே! இங்கே வாருங்கள் என்று ஒரு ஜன்னலுக்கு அருகில் அழைத்துச் சென்றார். என்ன தெரிகிறது? என்று கேட்டார்.

கஞ்சன் சொன்னான்: ஜன்னல் கண்ணாடி.

குரு: அது சரி. அது வழியாக என்ன தெரிகிறது.

கஞ்சன்: மக்கள்; தெருவில் நடமாடும் மக்கள்.

பின்னர், அந்தக் கஞ்சனை குரு, ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி அருகே அழைத்துச் சென்றார்.

இது என்ன?

கஞ்சன்:–முகம் பார்க்கும் கண்ணாடி.

இதில் என்ன தெரிகிறது?

கஞ்சன்:–நான் என்னைப் பார்க்கிறேன்.

ஜன்னலிலும் கண்ணாடிதான் இருந்தது. இங்கும் கண்ணாடிதான் இருக்கிறது. ஏன் இங்கே உங்கள் முகம் தெரிகிறது; அங்கே மக்கள் தெரிந்தது?

கஞ்சன்:– முகம் பார்க்கும் கண்ணாடியில் வெள்ளி (ரசம்) பூசியதால் என் முகம் தெரிந்தது. ஜன்னல் கண்ணாடி தூய பளிங்கு போன்றது.ஆகையால் மக்கள் தெரிந்தனர்.

உடனே குரு சொன்னார்: பார்த்தீர்களா. தூய கண்ணாடி இருந்தால் மக்கள் தெரிகின்றனர் (பொது நலம்). வெள்ளி இருந்தால் உங்களைத்தான் பார்க்க முடிந்தது (சுயநலம்). உங்களிடம் கொஞ்சம் வெள்ளி (பணம்) சேர்ந்துவிட்டால் மக்கள் மறைந்து உங்களை மட்டுமே பார்க்கிறீர்கள் என்றார்.

கஞ்சனுக்கு நீதி புரிந்தது!